In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 445/2015 |
| PW: | 5 |
| காவல் நிலையம்: | கொப்பம்பட்டி |
| தேதி: | 10-11-2025 நாள்: திங்கள் கிழமை |
| பெயர்: | சீதாலட்சுமி |
| க/பெ: | சந்தனமாரியப்பன் |
| கிராமம்: | கரிசல் குளம் |
| தாலூகா: | கோவில்பட்டி |
| வேலை: | இல்லத்தரசி |
| வயது: | 59 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.11.2025**

(Accused A1 to A4 absent.Petition u.s 317 Crpc / 355 Bnss filed and allowed) )

**முதல்விசாரணை**

1) நான் கரிசல் குளத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தன்று நான் சென்னையில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை போலிசார் நான் சென்னைக்கு சென்றுவிட்டு வந்த மறுநாள் நான் கடையில் இருந்த போது பெற்றார்கள் எதற்காக என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 03.07.2015 ம் தேதி 17.00 மணிக்கு இந்த வழக்கின் சம்பவ இடத்தை கொப்பம்பட்டி காவல் உதவி ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், அதில் நான் முதலாவது கையெழுத்து செய்தேன் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.